# பிற்காலச் சோழர்களின் ஊராட்சி முறை

CPA College

## சோழர் ஊராட்சி:-

"சோழர் காலத்தில் சிற்றூர்களே அரசியல் வாழ்வின் மெய்யான மையங்களாகவும், சமூக அரசியல் பண்புகளின் முதன்மையான வளர்ப்புப் பண்ணைகளாகவும் திகழ்ந்தன" என்பர் கிருட்டினசாமி

## ஊரவை வகைகள்:-

சோழர் காலத்தில் இருந்த ஊரவைகளை நான்காக வகைப் படுத்தியவர் சதாசிவபண்டாரத்தார்

1. கிராம அவை- அந்தணர் வாழ்ந்த சதுர்வேதிமங்கலத்தில் இருந்த அவை. பிரமதேய அவை எனவும் இது அழைக்கப்பட்டது.
2. தேவதான அவை கோவிலுக்குரிய தேவதானங்களில் இருந்த அவை.
3. ஊர் அவை – அந்தணர் அல்லாத பிற வகுப்பினர் வாழ்ந்த ஊர்களில் இருந்த அவை.
4. நகரவை - வாணிகர் வாழும் ஊர்களில் இருந்த அவை.

## ஊரவை அமைப்பு:-

ஊர் பெரும்பாலும் 30 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. மக்கள் தொகை மிகுந்திருந்த ஊர்களில் தொகுதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டிருந்தது. தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த செந்தலை 60 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

உறுப்பினர்கள் மூன்று வாரியங்களாகப் பிரிக்கப்படுவர்

1. சம்வத்சர வாரியம் (12 உறுப்பினர்கள்)
2. தோட்ட வாரியம் (12 உறுப்பினர்கள்)
3. ஏரிவாரியம் (6 உறுப்பினர்கள்)

CPA College

# பிற்காலச் சோழர்கள்

- விசயாலயன் - (846-881)
  - ↓ ஆதித்தன் - (871-907)
    - ↓ பராந்தகன் - (907-953)
      - ↓ இராசாதித்தன்
      - ↓ கண்டராதித்தன் (950-957)
        - ↓ உத்தம சோழன்
      - ↓ அரிஞ்சயன் (956-957)
        - ↓ சுந்தர சோழன் (957-970)
          - ↓ ஆதித்த கரிகாலன்
          - ↓ இராஜராஜன் I (985-1014)
            - ↓ இராஜேந்திரன் - I (1012-1044)
              - ↓ இராஜாதிராஜன் - I (1018-1054)
              - ↓ இராஜேந்திரன் - II (1051-1063)
              - ↓ இராஜமகேந்திரன் (1060-1063)
              - ↓ வீரராஜேந்திரன் (1063-1070)
                - ↓ அதிராஜேந்திரன்

↓ குலோத்துங்கன் - I - 1070-1120

↓ விக்கிரம சோழன் - 1118 - 1135

↓ குலோத்துங்கன் II - 1133 - 1150

↓ இராஜராஜன் II - 1146 - 1165

↓ இராஜாதிராஜன் II - 1163 - 1178

↓ குலோத்துங்கன் III - 1178 - 1218

↓ இராஜராஜன் III - 1216 - 1256

↓ இராஜேந்திரன் III - 1246 - 1279

CPA College

குடவோலை முறை:-

முப்பது உறுப்பினர்களுக்குள் 12 பேர் குடவோலை முறையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுள் 6 பேர் பஞ்சவாரிய உறுப்பினராகவும், 6 பேர் பொன்வாரிய உறுப்பினராகவும் கருதப்படுவர்.

1. கணக்கு வாரியம்
2. கலிங்கு வாரியம்
3. குடும்பு வாரியம்
4. நடைவழி வாரியம்

ஒருமுறை வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மீண்டும் 3 ஆண்டுகளுக்கு உறுப்பினர் ஆக இயலாது.

உறுப்பினர் ஆவதற்கு உரிய தகுதிகள்:-

ஊரில் உள்ள ஆண்மக்கள் அனைவரும் ஊரவையில் உறுப்பினர் ஆகும் பொதுத்தகுதி உடையவர்கள். சிறந்த கல்வியறிவு உடையவர்கள், அறநெறி பிறழாமல் தூயவழியில் பொருள் ஈட்டியவர்கள், 35 வயதுக்கு மேல் 70 வயதுக்கு உட்பட்டவர்கள், சொந்தமனையில் வீடுகட்டிக் குடியிருப்பவர்கள்

தேர்தல் முறை:-

உறுப்பினர்களின் தேர்தல் அரசு ஆணைபெற்ற அலுவலர் ஒருவரால் மேற்பார்வையிடப்பட்டது. உறுப்பினர் தேர்தலின் போது ஊர்மக்கள் அடங்கிய பேரவையினரின் வருகை கட்டாயமாக்கப் பட்டிருந்தது.

பெயர்கள் எழுதப்பட்ட ஓலைகள் ஒரு குடத்தில் இடப்பட்டிருக்கும். ஒன்றும் அறியாத சிறுவன் ஒருவனை ஓர் ஓலையை எடுக்கச் சொல்லி அதை நடுவர் கையில் கொடுப்பான்

CPA College